

நாட்டின் 78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தேசியக் கொடியினை ஏற்றி மரியாதை செலுத்தி இனிப்புகளை வழங்கினார். கழக செய்தித் தொடர்பு அணித் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் மா.பா. அன்பு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இன்று

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (16.08.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : முப்பெரும் விழா**

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.

### பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், பாலின சமநிலையை உறுதிப்படுத்தவும்,

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் பலன்களை அளித்துள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக.16 - திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 9.8.2024 அன்று மக்களவையில், பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், பாலின சமநிலையை உறுதிப்படுத்த வும், ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள், தேவையான பலன்களை அளித்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி அண்ணபூர்னா தேவியிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அமைச்சர் அன்னபூர்ணா தேவ் அளித்த பதில் வருமாறு:

நீடித்த வளர்ச்சி குறியீடுகளை அடைவதில் பெண்களின் முன்னேற்றம் என்ற நிலையிலிருந்து பெண்களால் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றம் என்ற நிலையை நோக்கி, ஒன்றிய அரசின் திட்டங்கள், பீடுநடை போட்டு செல்கின்றன என்றும், கல்வியில்,பொருளாதார மேம்பாட்டில், அரசியல் அதிகாரமளித்தல் ஆகிய அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டு வருகிறது.

அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 106ன் படி, நாரி சக்தி வந்தன் அதிநியம் 2023ன் கீழ், மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கான நாடாளுமன்ற தொகுதிகளையும், சட்டமன்றத் தொகுதிகளையும் ஒதுக்கீடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், பெண்களுக்கான வேலைவாய்ப்பு சட்டங்களில் தேவையான கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டள்ளன என்றும், பெண் அறிவியாலாளர்கள் திட்டம், விக்யான் ஜோதி திட்டம், போன்ற திட்டங்களின் மூலம் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க தேவையான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது.

பெண்கள் உதவி மையங்களின் மூலம், பெண்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், கட்டணமில்லாத் தொலைபேசி எண் 181 சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பேட்டி பச்சவோ, பேட்டி படாவோ என்ற திட்டத்தின் மூலம் பெண் சிசு கொலைகள் தடுக்கப்பட்டு வருகின்றது .

சக்தி நிவாஸ் என்ற திட்டத்தின் மூலம் வேலைக்கு செல்லும் பெண்களுக்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது, பிரதம மந்திரி மாந்துரு வந்தனா என்ற திட்டத்தின் மூலம் கர்ப்பிணி பெண்களுக்கான நிதியுதவி நேரடியாக அவர்கள் வங்கியிலேயே செலுத்தபடுகிறது, சமக்ரா சிக்ஷா என்ற திட்டத்தின் படி பள்ளிகளில் பெண்களுக்கான கழிப்பறை கள், கல்வி உதவித் தொகை, அரசுத் துறைகள் பெண் அமைப்புகளுக்கு உதவி செய்யும் வகையில் கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு உள்ளது.

பிரதம மந்திரி கௌசில் கேந்திரா திட்டத்தின் மூலம் பெண்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது 10 கோடி பெண்களுக்கு பயனளிக்கும் வகையில் 90 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகிறது.

இவ்வாறு அமைச்சர் திருமதி அண்ணபூர்னா தேவி பதில் அளித்துள்ளார்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்

# சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவில் மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி!

### மு.தென்னவன் - இராம அருணகிரி - அ.கணேசன் - த.சேங்கைமாறன் - கழகத்தினர் பங்கேற்பு!

சிவகங்கை, ஆக. 16 - சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகளின் சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழகத் தலைவர் - தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சிங்கம்புணரியில் தென்னிந்திய அளவிலான மாபெரும் மகளிர் மின்னொளி கபாடி போட்டி இன்று முதல் (ஆகஸ்ட் 16,17,18.2024) 3 நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமை ஏற்கிறார்.

இவ்விழாவில் மாநில இலக்கிய அணித்தலைவர் மு.தென்னவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் சேங்கை மாறன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி சேர்மன் ந.அம்பலமுத்து, தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், பேரூர்ச் செயலாளர் தி.கதிர்வேல், பொதுக்குழு உறுப்பினர் மு.சோமசுந்தரம், பி. ஆர்.பெருமாள், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ்.முத்துக்குமார், பேரூராட்சி துணைச் சேர்மன் இந்தியன் செந்தில் குமார், ஜமாத் தலைவர் எம்.ராஜாமுகமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அஞ்சப்பர் எஸ்.ஜெயராமன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் கேஎஸ்.நாராயணன், மருத்துவர் இ.அருள்மணி நாகராஜன், கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆர். செல்வகுமார், பேரூர் கழகப் பொருளாளர் க.செந்தில்கிருஷ்ணன், வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

முதல் பரிசு - ரூ.100071 - வழங்குபவர் கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்.

இரண்டாம் பரிசு - ரூ.75071 வழங்குபவர் - அம்பலமுத்து (பேரூராட்சி சேர்மன்),

மூன்றாம் பரிசு - ரூ.50071 வழங்குபவர் - முறையூர் ஊராட்சி மன்றத் தலைவர் என்.எம்.சுரேஷ்,

நான்காம் பரிசு - ரூ.25071 வழங்குபவர் - இந்தியன் செந்தில்குமார் (பேரூராட்சி துணைச் சேர்மன்).

மேலும் இந்நிகழ்வில், மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக்கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை கபாடி போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் பேரூர்க் கழக அவைத்தலைவர் ஆர்.சிவக்குமார், ஒன்றியப் பொருளாளர் ஆ.பாஸ்கரன், மாவட்ட அயலக அணி துணைஅமைப்பாளர் ஆர்.புகழேந்தி, அகில இந்திய கபாடி போட்டி நடுவர் எஸ்.சிவனேஷ்குமரன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர் அ.சையது இப்ராகிம் ஆகியோர் போட்டிக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

### சிறுபான்மையினருக்கு விரோதமாக

# ஒன்றிய அரசு வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா கொண்டு வருவதா?

### டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் கண்டனம்!

சென்னை, ஆக.16– சிறுபான்மையினருக்கு விரோதமாக ஒன்றிய அரசு வக்ஃப் வாரிய சட்டத் திருத்தம் கொண்டு வந்ததற்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில துணைச் செயலாளர்கள் இரா. அனவர்கான், நூறுல்லா, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, அடையாறு ஷபீல் கான் மற்றும் கா.ரபி அகமது உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

தாய்த்தமிழ்நாட்டின் நவீன சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு நினைவைப் போற்றுகிற விதமாகவும், கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவால் உயிரிழந்த குடும்பங்களுக்கும் ஒரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்படுகிறது.

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட வரலாறு கண்டிராத கடும் நிலச் சரிவால் பாதிக்கப்பட்டு 400க்கும் மேற்பட்டோர் தங்கள் உடைமைகளை, உறவுகளை இழந்து தவிப்பது மிகுந்த வேதனையளிக்கிறது. அண்டை மாநில உறவுகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டிட முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் படி கேரள மாநில முதல்வரிடம் ரூ.5 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டதற்கு நன்றியை தெரிவித்து, உயிரிழந்தவர்கள் அனைவருக்கும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் இக்கூட்டம் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் தமிழ் மண்ணின் உரிமைகள் காத்து தமிழ்நாட்டு மக்களின் நலன் காத்திட உழைத்திடும் தன்னிகரில்லா தலைவர்; நாடு போற்றும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால், "ஏழ்மை கல்விக்குத் தடையில்லை என்ற உன்னத முழக் கத்துடன் புதுமைப்பெண் எனும் புரட்சிகர திட்டத்தை தொடர்ந்து ஏழை எளிய மாணவர்களின் உயர் கல்வி கனவை எளிதாக்கும் பொருட்டு 09.08.2024 அன்று கோவையில் தொ டங்கப்பட்ட 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்திற்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்திட்டம் இந்தியாவுக்கு மட்டுமல்ல உலகுக்கே வழிகாட்டும் என்றால் மிகையல்ல.

பாசிசத்தின் ஆணவத்தை அடக்கிட கடந்த ஏப்ரல் மாதம் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் INDIA கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட கழக வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களுக்கும் வாக்களித்து 40 க்கு 40 என்ற வரலாற்று வெற்றியை 'திராவிட மாடல்' அரசுக்கு தேடித் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி!

பாசிசத்தின் முழு உருவமாகத் திகழும் ஒன்றிய மைனாரிட்டி பாஜக அரசு தனது ஆணவத்தின் அடையாளமாக சிறுபான்மையின மக்களை நேரிடையாக பாதிக்கும் NRC, CAA, NPR மற்றும் UCC உள்ளிட்ட சிறுபான்மையினர் விரோத சட்டங்களை தொடர்ந்து புதிதாக கொண்டுவந்துள்ள வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவை இக்கூட்டம் கடுமையாக எதிர்க்கிறது.

சகோதரத்துவத்தை, சமத்துவத்தை துளியளவு கூட விரும்பாத பாசிச பாஜகவின் இந்த திருத்தச் சட்ட மசோதா, இஸ்லாமியர்கள் மற்றும் சிறுபான்மையினர் மட்டுமின்றி ஒட்டுமொத்த மனித இனத்திற்கே எதிரானது.

இஸ்லாமியர்களின் நலனுக்காக இஸ்லாமியர்களால் அர்ப்பணிக்கப்பட்ட சொத்துக்களை அவர்களிடமிருந்து பறிக்கும் ஒன்றிய அரசின் இச்செயல் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மதச் சுதந்திரத்துக்கு முற்றிலும் எதிரானது.

வக்பு வாரியத்தில் முஸ்லிம் அல்லாதவர்களையும் அதனை நிர்வகிக்க ஒப்புதல் அளிக்கும் திருத்தம், வக்பு சொத்துகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் மாநில அரசின் பணிகளை பறித்து ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு செல்வது அராஜகத்தின் உச்சமாகும். கூட்டாட்சித் தத்துவத்தை சிதைத்து சிறுபான்மையினருக்கு எதி ரான இந்த சட்டத்திருத்தத்தை ஒன்றிய அரசு முழுவதுமாக ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்துவதோடு, சிறுபான்மை யினருக்கு எப்போதெல்லாம் இன்னல் நேர்கிறதோ அப்போதெல்லாம் அரவணைத்துக் காத்திடும் கழகத் தலைவர் அவர்களின் வழியில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு தனது கடும் கண்டனத்தை பதிவு செய்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலோடு கழக சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் ஒன்றியம், நகரம், பகுதி, மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் நியமனம் செய்தல்; சிறுபான்மையின பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்கேற்பை உறுதி செய்திடும் பொருட்டு அதிகளவில் அவர்களுக்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

எதிர்வரும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, பெரியார் பிறந்த நாள் விழா மற்றும் கழகத்தின் 76 ஆம் ஆண்டு துவக்க நாள் விழா, ஆகிய முப்பெரும் விழாவினை கழக சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் அந்தந்த மாவட்டங்களில் எழுச்சியுடன் கொண்டாடுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

### சிவகங்கை மாவட்ட கழகத் துணைச் செயலாளர்

# கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி!



சிவகங்கை. ஆக.16- சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்ட கழக துணை செயலாளராகவும் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவராகவும் இருந்தவர் கே. எஸ். எம். மணிமுத்து. வயது.59. நேற்று காலையில் காஞ்சிரங்காலில் சுதந்திர தின விழா மற்றும் கிராமசபை கூட்டத்திற்கான பணிகளை கவனித்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டதால் சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரிக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்கள். மணிமுத்துவிற்கு மலர்விழி என்ற மனைவியும் ரெஜினாபானு யமுனாதேவி, என்ற இரண்டு மகள்கள் உள்ளார்கள்.

மணிமுத்துவின் இறுதிச் சடங்குகள் இன்று காலை 10 மணிக்கு திருப்பத்தூர் சாலையில் உள்ள அவரது இல்லமான கலைஞர் மாளிகையிலிருந்து நடைபெறுகிறது. நேற்று மணிமுத்துவின் உடலுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மற்றும் கழக நிர்வாகிகள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், மறைந்த மணிமுத்துவின் மனைவி மற்றும் மகள்களுக்கு ஆறுதல் கூறினார். மணிமுத்துவின் உடலுக்கு மாவட்டம் முழுவதிலுமி ருந்து திமுகவினர் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினர் பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.



நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் 54 வது வார்டு திருமால்நகரில் அமைந்துள்ள உள்விளையாட்டு அரங்கில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 லட்சம் மதிப்பில் தரைத்தளம் அமைக்கும் பணிக்கு மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.உடன் மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,வழக்கறிஞர் தினேஷ் மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி,அம்பிகா,கந்தன், மன்சூர்,மாரியப்பன்,பகுதி கழக அவை தலைவர் ஆடிட்டர் உமா மகேஸ்வரன்,சுபஹானி, சாய்பாபா,கால்வாய் துரை பாண்டியன்,காசிமணி,சதீஷ், செல்வம்,மகேஷ்,கனி,சாமுவேல், பக்கீர் முகைதீன் பிள்ளை, திருமால் நகர் மக்கள் நல சங்க நிர்வாகிகள் பிச்சையா, ரவிச்சந்திரன்,கோமதிநாயகம், உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### பாக்குவாஞ்சேரி கிளைக் கழக முன்னாள் அவைத் தலைவர்

# மு.ராஜமாணிக்கத்தின் துணைவியார் ரா.லட்சுமி நினைவஞ்சலி!

### கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம், ஆக. 16- காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் தெற்கு ஒன்றியம், பாக்கு வாஞ்சேரி கிராமம் கிளைக் கழக முன்னாள் அவைத் தலைவர் மு.ராஜ மாணிக்கத்தின் துணைவியாரும் பாக்குவாஞ்சேரி கிளைக் கழகப் பிரதிநிதி பெ.திரு வேங்கடத்தின் பெரிய தாயாருமான ரா.லட்சுமி 30.7.2023 புதன் அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் 16ஆம் நாள் நினைவு அஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (16.8.2024 - வெள்ளி) மாலை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு அன்னாரது திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.



மதுரை மாநகராட்சி பழங்காநத்தம் பகுதியில் 74–வது வார்டில் புதுப்பிக்கப்பட்ட மாநகராட்சி திருமண மண்டபத்தை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மதுரை மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார் திறந்து வைத்தனர். உடன் பழங்காநத்தம் பகுதிச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் எஸ்.வி.சுதன், வட்டச் செயலாளர் ஆர்.சௌந்தரராஜன் ஆகியோர் உள்ளனர்.